தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 51 | 4 Pages | 20.9.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 51 | 4 பக்கங்கள் | 20.9.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்நெஞ்சத்**
**தானறி குற்றப் படின்**

**விளக்கம்:**
தன் மனம் தான் அறிந்த குற்றத்தில் தங்குமானால் வானத்தைப் போல் உயர்ந்துள்ள தவக்கோலம் ஒருவனுக்கு என்ன பயன் செய்யும்.

# முன்னாள் அமைச்சர் சுந்தரம் உடலுக்கு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அஞ்சலி

சென்னை, செப்.20

திமுக முன்னாள் அமைச்சர், பொன்னேரி தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ.,வும் அக்கட்சியின் ஆதிதிராவிட நலக்குழுவின்தலைவருமான க.சுந்தரம் (76) உடல்நலக்குறைவால் உயிரிழந்தார்.

திமுகவின் பட்டியலினத் தலைவர்களில் முக்கியமானவரான க.சுந்தரம், இரண்டு முறை திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். 1989ம் ஆண்டு திமுக ஆட்சியில் ஆதிதிராவிட நலத் துறை அமைச்சராகவும், 1996 2001 திமுக ஆட்சியில் பால்வளத் துறை அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். திமுகவில் முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளில் ஒன்றான துணை பொதுச் செயலாளராகவும் அவர் இருந்துள்ளார். கடந்தாண்டு திமுக முப்பெரும் விழாவில் க.சுந்தரத்திற்கு, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 'அண்ணா விருது' வழங்கி கவுரவித்தார்.



முன்னள் அமைச்சர் சுந்தரம் மறைவுக்கு தி.மு.க. நிர்வாகிகள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், மீஞ்சூரில் மறைந்த முன்னாள் அமைச்சர் சுந்தரம் உடலுக்கு திமுக தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினார். பின்னர் சுந்தரம் குடும்பத்தினரை நேரில் சந்தித்து, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் தெரிவித்தார்.

முன்னதாக தமிழக முதல்அமைச்சர்வெளியிட்டிருந்த இரங்கல் செய்தியில், "திமுகவின் ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான க. சுந்தரம் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன். க.சுந்தரம் பொன்னேரி சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகவும், பால்வளத் துறை அமைச்சராகவும்திறம்படப் பணியாற்றியவர். தி.மு.கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்த க. சுந்தரம், கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்ற தீரமிகு செயல்வீரர். தலைவர் கலைஞர் மீதும் என் மீதும் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர்.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் மீஞ்சூரில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று அவரது உடல்நிலை குறித்துக் கேட்டறிந்த காட்சிகள் இப்போதும் என் நெஞ்சைவிட்டு அகலவில்லை. கடந்த ஆண்டு வேலூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் க.சுந்தரம் அவர்களது கழகப் பணிகளைப் பாராட்டி அண்ணா விருதினையும் வழங்கியிருந்தேன். கழகப் பணியிலும், மக்கள் பணியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்ட க.சுந்தரம் அவர்களது மறைவு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் திருவள்ளூர் மாவட்ட மக்களுக்கும் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அதில் தெரிவித்திருந்தார்.

## இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தையும் தோல்வி: போராட்டத்தை தொடரும் டாக்டர்கள்



கொல்கத்தா, செப். 20

கொல்கத்தாவில் பெண் டாக்டர் கொலை தொடர்பாக நீதி கேட்டு ஜூனியர் டாக்டர்கள் பணிகளை புறக்கணித்ததுடன், போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடைசி கட்ட பேச்சுவார்த்தைக்கு முதல் மந்திரி மம்தா பானர்ஜி அழைப்பு விடுத்திருந்தார். ஜூனியர் டாக்டர்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அப்போது மம்தா பானர்ஜி, கொல்கத்தா போலீஸ் கமிஷனரை நீக்குதல் உள்ளிட்ட 3 நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டார்.

மேற்குவங்க மக்கள் மம்தா மீதான நம்பிக்கையை இழந்துவிட்டனர். இதனால் தான் பாஜக, மம்தா பானர்ஜி ராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது. மம்தா பானர்ஜி ராஜினாமா செய்ய வேண்டும் என்ற மக்களின் வலியுறுத்தலை நிறைவேற்றும் வகையில் பாஜக தொடர்ந்து போராடும் என பா.ஜ.க. மாநில தலைவர் கூறினார்.

இதற்கிடையே, நேற்று முன்தினம் மாலை முதல் நள்ளிரவு வரை ஜூனியர் டாக்டர்கள் கலந்து ஆலோசனை நடத்தினர். அதன்படி, எங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் வரை போராட்டம் மற்றும் வேலை நிறுத்தப் பணிகள் தொடரும். மாநில அரசுடன் புதிய பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறோம் என ஜூனியர் டாக்டர்கள் தெரிவித்தனர். இந்நிலையில், ஆர்.ஜி.கர் மருத்துவமனை ஜூனியர் டாக்டர்களின் வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர மேற்குவங்க அரசின் அதிகாரிகளுக்கும், ஜூனியர் டாக்டர்களுக்கும் இடையே நேற்று இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடந்தது. இந்தப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. கூட்டத்தின் எழுத்துப்பூர்வ அறிக்கையை அரசு கொடுக்க மறுத்ததைத் தொடர்ந்து, டாக்டர்கள் குற்றம் சாட்டினர். அரசு மருத்துவமனைகளில் டாக்டர்களின் பாதுகாப்பு குறித்து எழுத்துப்பூர்வ உத்தரவுகளை அரசு வெளியிடும் வரை, தங்களது போராட்டம் மற்றும் வேலை நிறுத்தத்தைத் தொடர உள்ளோம் என தெரிவித்தனர்.

## ராஜஸ்தானில் ஆழ்துளை கிணற்றில் விழுந்த குழந்தை: மீட்புப் பணிகள் தீவிரம்



ஜெயப்பூர், செப். 20

ராஜஸ்தானின் டவுசா மாவட்டம் பாண்டுகி என்ற இடத்தில் நேற்று மாலை 6 மணியளவில் 35 அடி ஆழ ஆழ்துளை கிணற்றில் இரண்டரை வயது பெண் குழந்தை தவறி விழுந்தது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு தேசிய பேரிடர் மேலாண் மீட்புப்படையினர், தீயணைப்பு படையினர் மற்றும் போலீசார் வரவழைக்கப்பட்டனர். தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன.

இதுதொடர்பாக மீட்புக்குழு அதிகாரிகள் கூறுகையில், சுமார் 15 அடி ஆழத்தில் குழந்தை சிக்கியுள்ளது. குழந்தை விழுந்த இடத்தின் பக்கத்து நிலத்தில் ஜே.பி.சி. இயந்திரம் மூலம் பள்ளம் தோண்டி குழந்தையை மீட்கும் பணிகள் நடந்து வருகிறது என தெரிவித்தனர்.

## உத்தர பிரதேசத்தில் சரக்கு ரெயில் தடம் புரண்டு விபத்து: ரெயில் சேவை பாதிப்பு



லக்னோ, செப். 20

உத்தர பிரதேசம் மாநிலம் மதுராவில் உள்ள பிருந்தாவன் ரோடு என்ற இடத்தில் சரக்கு ரெயிலின் 15 பெட்டிகள் தடம் புரண்டு விபத்தில் சிக்கியுள்ளது. இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, டெல்லி நோக்கிச் செல்லும் ரெயில் சேவை பாதிப்பு அடைந்துள்ளது. மேலும் அப்பகுதி வழியாக செல்லும் 15 ரெயில்களின் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறிந்து ரெயில்வே ஊழியர்கள் விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதேபோல், நேற்று மாலை பீகாரின் நாராயண்பூரில் சரக்கு ரெயிலின் 4 பெட்டிகள் தடம்புரண்டு விபத்தில் சிக்கியது குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து கேரளா வந்தவருக்கு குரங்கம்மை பாதிப்பு

ஆப்ரிக்கா, செப். 20

ஆப்ரிக்க நாடுகளில் குரங்கம்மை தொற்று வேகமாக பரவி வருவதை அடுத்து, உலகளவில் அந்த தொற்றை பொது சுகாதார அவசரநிலையாக, உலக சுகாதார அமைப்பு சமீபத்தில் அறிவித்தது. காய்ச்சல், தலைவலி, வீக்கம், முதுகுவலி, தசைவலி போன்றவை இதன் அறிகுறிகள் ஆகும். பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்திலும் குரங்கம்மை தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டதை அடுத்து, விமான நிலையங்கள், துறைமுகங்கள் உள்ளிட்ட பகுதிகளில் மத்திய அரசு கண்காணிப்பை தீவிரப்படுத்தியது. இந்நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து கேரளா மாநிலத்தின் மலப்புரம் திரும்பிய 38 வயதுடைய நபருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. குரங்கம்மை பாதிப்பு இருக்குமோ என அவரது ரத்த மாதிரிகளை பரிசோதனை செய்ததில், அந்த நபர் குரங்கம்மை நோயால் பாதிக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. மலப்புரம் மருத்துவமனையில்அவருக்குசிகிச்சைஅளிக்கப்பட்டுவருவதாகமாநிலசுகாதாரத்துறை மந்திரி வீணா ஜார்ஜ் கூறியுள்ளார். மேலும் அவர், வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் குரங்கம்மை அறிகுறி தென்பட்டால், சுகாதார அமைப்பினருக்கு தகவல் தெரிவித்து சிகிச்சை பெறும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.


# மதுரையில் உள்ள ஹானா ஜோசப் மருத்துவமனையில் பிரைன் லேப்பைபர் ட்ராக்கிங் தேவிகேசன் மூளை கட்டிகளை அறுவை சிகிச்சை செய்து சாதனை


மதுரை, செப். 20

இந்திய அளவில் முதல் முறையாக மதுரையில் உள்ள ஹானா ஜோசப்மருத்துவமனையில்பிரைன் லேப்பைபர் ட்ராக்கிங் தேவிகேசன் 3.0 வெர்கன் எனப்படும் மூளை கட்டிகளை அறுவை சிகிச்சை செய்து சாதனை படைத்துள்ளனர்.

மதுரை விரகனூர் சுற்றுச் சாலையில் உள்ள ஹானா ஜோசப் டாக்டர்கள் இந்திய அளவில் முதன் முறையாக புதிய தொழில் நுட்பத்துடன் மூளை அறுவை சிகிச்சை நடத்தி சாதனை படைத்துள்ளனர். இதுகுறித்து ஹானா ஜோசப் மருத்துவமனை தலைவர் மற்றும் முதுநிலை மூளை நரம்பியல் அறுவை சிகிச்சை டாக்டர் அருண்குமார் அளித்த பேட்டியில் கூறியதாவது:

நாங்கள் மூளை கட்டிகளை அகற்றுவதற்கு பிரைன்லேப் என்ற புதிய மேம்பட்ட தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதில் பெருமைப் படுகிறோம். இந்த தொழில்நுட்பத்தின் வாயிலாக மூளை கட்டிகளை



துல்லியமாக கண்டறிந்து அகற்றப்படுகிறது. அதன் பின்பு நோயாளிக்கு முறையான கதிர் இயக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது. எங்களுடைய மருத்துவமனையில் கடந்த ஒரு மாதத்தில் மூன்று நோயாளிகளுக்கு இந்தியாவில் முதன்முறையாக புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மூளைக் கட்டி அறுவை சிகிச்சை நடத்தி சாதனை படைத்துள்ளோம். இந்த அறுவை சிகிச்சையால் நோயாளிகளுக்கு எந்தவித பக்க விளைவுகள் ஏற்படாமல் மூளைக்கட்டிகள் அகற்றப்பட்டுள்ளது. இந்த அறுவை சிகிச்சையில் நரம்பியல் நிபுணர்கள், கதிரியக்க நிபுணர்கள், செவிலியர்கள் ஆகியோர் பங்கு மிகவும் முக்கிய மானதாகும்.

இந்த புதிய அறுவை சிகிச்சையில் மைக்ரோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மூளைக்கட்டி அகற்றப்பட்டுள்ளது. மேலும், இந்த தொழில்நுட்பத்தின் வாயிலாக மூளையின் நரம்பு தண்டுகளில் பாதிப்பு ஏற்படாத வகையில் அறுவை சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது. இந்த அறுவை சிகிச்சை நடத்தப்பட்ட பத்து நாட்களில் நோயாளிகள் இயல்புநிலைக்கு திரும்பு கின்றனர். இதனால் நோயாளிகளுக்கு எவ்வித நரம்பியல் குறைபாடுகளும் ஏற்படுவதில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது பிரைன் லேப் இந்தியா நிறுவனத்தை சேர்ந்த விபா சிங், டாக்டர் அர்த்தநாரீஸ்வரர் ஆகியோர் பங்கேற்று பிரைன் லேப் தொழில்நுட்பத்தை விளக்கி பேசினர். ஏற்பாடுகளை மார்க்கெட்டிங் தலைமை அதிகாரி சேகர் செய்து இருந்தார்.

# விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் தர்ணா

விழுப்புரம், செப். 20

விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் உரிமை சங்கத்தின் மாவட்ட செயலாளர் பாலகிருஷ்ணன் தலைமையில் மாற்றுத்திறனாளிகள் நேற்று மாவட்ட கலெக் டர் அலுவலக வளாகத்தில் அமர்ந்து திடீரென தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். உடனே அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் விரைந்து சென்று அவர்க ளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.



அப்போது அவர்கள் கூறுகையில், விழுப்புரம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தங்கவேல், தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் சட்டத்தை பின்பற்றாமல் மாற்றுத்திறனாளிகளுக்கு எதிராகசெயல்பட்டு வருகிறார். எனவே அவர் மீது உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி னர். இதை கேட்டறிந்த போலீசார், இது குறித்து மாவட்ட கலெக்டரின்கவனத்திற்கு கொண்டு செல்வதாக கூறினர். இருப்பினும் அதனை ஏற்க மறுத்து தொடர்ந்து போராட்டம் செய்தனர். பின்னர் அரசுத்துறை உயர் அதிகாரிகள் அங்கு நேரில் வந்து போராட்டத்தில் ஈடுபட்ட மாற்றுத்திறனாளிக ளிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது இதுகு றித்து விசாரணை செய்வதாக கூறியதன்பேரில் அவர்கள் போராட்டத்தை கைவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# செஞ்சிக்கோட்டையில் பாரம்பரைய நடை விழா

செஞ்சி, செப். 20

செஞ்சிக்கோட்டையில் நடைபெற்று வரும் பாரம்பரிய நடை விழாவில் துணை ஆட்சியர் பயிற்சி குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர்வட்டாட்சியர் ஏழுமலை, மாவட்டக் கல்வி அலுவலர் சுமதி. பள்ளி துணை ஆய்வாளர் A.வினாயக மூர்த்தி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் செஞ்சி பேரூராட்சி சேர்மன் KSM மொக்தியார் அலி கலந்துக் கொண்டு சிறப்பித்தார்.

முட்டத்தூர். ஒய்க்காப் மேனிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் & விழுப்புரம் ஜூனியர் ரெட் கிராஸ் மாவட்டக்கன்வீனர். ம.. பாபு செல்வதுரை வரவேற்புரையாற்றினார்.

750 பள்ளி மாணவ, மாணவிகள் செஞ்சிக் கோட்டை கண்டு களித்தனர்.



தினகனி



# கோவிலில் பூஜை செய்ய வந்தவர்களுடன் யூடியூபர் ஜி.பி.முத்து வாக்குவாதம்

தூத்துக்குடி, செப். 20

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி வெங்கடாசலபுரத்தில் பிரம்மசக்தி அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவில் யூடியூபர் ஜி.பி.முத்து மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமானதாகும்.

இந்த கோவிலில் தூத்துக்குடியைச் சேர்ந்த மகேஷ் பூசாரியாக உள்ளார். நேற்று முன்தினம் புரட்டாசி மாத பிறப்பையொட்டி கோவிலுக்கு மகேஷ் மற்றும் அவரது உறவினர்கள் பூஜை வைப்பதற்காக வந்தனர்.



அப்போது அங்கு வந்த ஜி.பி.முத்து, மகேசை இந்த கோவிலுக்கு இனி நீ பூஜை வைக்கக்கூடாது என்று தெரிவித்ததாக கூறப்படுகிறது. அப்போது மகேஷ் தரப்புக்கும், ஜி.பி.முத்துவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஜி.பி.முத்து தகாத வார்த்தைகளால் வீதியில் நின்று பேசியதாக கூறப்படுகிறது. இதை அங்கிருந்தவர்களில் சிலர் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டனர்.

தற்போது அந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக குலசேகரன்பட்டினம் போலீசில் மகேஷ் தரப்பினர் புகார் செய்தனர். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# திருச்சியில் சேது எக்ஸ்பிரஸ் ரயிலின் 3 பெட்டிகள் தனியாக கழன்று ஓடியதால் பரபரப்பு

திருச்சி, செப். 20

ராமேஸ்வரத்தில் இருந்து சென்னை எழும்பூர் செல்லும் சேது எக்ஸ்பிரஸ் ரெயில் இன்று அதிகாலை 1.10 மணிக்கு திருச்சி ஜங்ஷன் ரெயில் நிலையம் வந்தது. அங்குள்ள நடைமேடை பகுதியில் எஞ்சின் டிரைவர் ரெயிலை நிறுத்த முயன்றார்.

அப்போது அந்த ரெயிலின் கடைசி 3 பெட்டிகள் தனியாக கழன்று ஓடியது. இதைக்கண்டு, சேது எக்ஸ்பிரஸ் ரெயில் பயணிகளும், ரெயில் நிலையத்தில் நின்றிருந்த பயணிகளும் அதிர்ச்சியில் உறைந்தனர். அதிர்ஷ்டவசமாக ரெயில் பெட்டிகள் தடம் புரளவில்லை. இதனால் பயணிகள் உயிர் தப்பினர்.



உடனே இதுபற்றி உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. ரெயில் நிலைய பொறியாளர்கள் விரைந்து வந்து ரெயில் பெட்டிகளை இணைத்தனர்.

அதன்பிறகு ரெயில் சென்னைக்கு புறப்பட்டு சென்றது. பெட்டிகள் இணைப்பு பகுதியில் ஏற்பட்ட பழுது காரணமாக இந்த சம்பவம் நடந்துள்ளது.

இந்த சம்பவம் காரணமாக சுமார் அரை மணி நேரம் தாமதமாக சேது எக்ஸ்பிரஸ் ரெயில் சென்னையை சென்றடைந்தது. ரெயிலில் இருந்து பெட்டிகள் தனியாக கழன்று ஓடிய சம்பவம் திருச்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# புற்றுநோய் சிகிச்சை மையம் கட்ட திருமண மொய் பணம் ரூ.1.91 லட்சத்தை நன்கொடையாக வழங்கிய புதுமண தம்பதி

மதுரை, செப். 20

தேனி மாவட்டம் ஜக்கம்பட்டியில் சென்னையை சேர்ந்த ஐ.டி. என்ஜினீயர் ஹரிஹரன் தேன்மொழி ஆகியோருக்கு சமீபத்தில் திருமணம் நடைபெற்றது. இந்த திருமண விழாவில் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் மூலம் கிடைத்த திருமண மொய் பணத்தை ஏதாவது ஒரு வகையில் ஏழை மக்களின் உதவிக்காக பயன்படுத்த வேண்டும் என்று இந்த புதுமண தம்பதியினர் திட்டமிட்டனர்.

இந்த நிலையில் மணமகன் ஹரிஹரனின் தந்தை மீனாட்சிசுந்தரம், தனது செல்போனில் சமூக வலைதள பதிவவை பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது மதுரையை அடுத்த திருப்பரங்குன்றம் பகுதியை சேர்ந்த ஒரு தனியார் அறக்கட்டளை புற்று நோயாளிகளை பராமரிப்பதற்கும், சிகிச்சை அளிப்பதற்கும் தனியாக ஒரு மையம் ஏற்படுத்தி வருவதாகவும், அதற்கு தாராள மனம் கொண்ட நன்கொடையாளர்கள் உதவி செய்யும்படியும் அந்த வீடியோவில் அந்த அறக்கட்டளை சேர்ந்த பால் மாணிக்கம் என்பவர் வீடியோ பதிவிட்டு இருந்ததை பார்த்தார்.



இந்த தனியார் அறக்கட்டளையின் நோக்கம் நிறைவேற இந்த புதுமணத் தம்பதியினர் உதவும் வகையில் தங்களது திருமணத்தில் கிடைத்த மொய் பணம் ரூ.1.91 லட்சத்தை இந்த அறக்கட்டளையின் புற்றுநோய் சிகிச்சை மையம் கட்டுவதற்கு உதவியாக வழங்க திட்டமிட்டனர். இதற்காக மீனாட்சி சுந்தரம் மற்றும் புதுமண தம்பதியர் ஹரிஹரன் தேன்மொழி ஆகியோர் திருப்பரங்குன்றம் வந்து அங்குள்ள தனியார் அறக்கட்டளை நிர்வாகிகளிடம் இந்த தொகையை நன்கொடையாக ஒப்படைத்தனர்.

இது தொடர்பாக அறக்கட்டளை மேலாளர் ரமேஷ் கூறுகையில், புதுமணத் தம்பதியினர் தங்களது திருமண நிகழ்ச்சியில் கிடைத்த மொய் பணம் ரூ.1.91 லட்சத்தை புற்றுநோய் சிகிச்சை பிரிவு கட்டிட கட்டுமானத்திற்காக நன்கொடையாக தந்துள்ளனர். இதை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டுள்ளோம். இந்த மையம் அமைக்க ரூ.40 லட்சம் செலவாகும் என திட்டமிடப்பட்டுள்ளது.

20 படுக்கைகள் கொண்ட இந்த சிகிச்சை மையத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கி சிகிச்சை பெறவும், அவர்களுக்கு தேவையான மறுவாழ்வு பணிகளை செய்ய முடிவு செய்துள்ளோம். இந்த புதிய சிகிச்சை மையம் இன்னும் சில வாரங்களில் தயாராகி விடும் என்றார்.

திருமணத்திற்கு வந்த மொய் பணத்தை வைத்து எதிர்காலத்திற்கு திட்டமிடும் மணமக்கள் மத்தியில், புற்றுநோய் சிகிச்சை மையம் கட்ட இந்த புதுமணத் தம்பதியின் தன்னலமற்ற சேவையை பலரும் பாராட்டி உள்ளனர்.

# தெருநாய்கள் கடித்ததால் பலி: வளர்ப்பு நாய்க்கு இறுதிச்சடங்கு செய்த குடும்பத்தினர்

மேட்டுப்பாளையம், செப். 20

கோவை மேட்டுப்பாளையம் மணி நகர் பகுதியை சேர்ந்தவர் அருள்வேல். காய்கறி வியாபாரி. இவருக்கு மனைவி மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர்.

அருள்வேல் தனது வீட்டில் கடந்த 6 ஆண்டுகளாக ஆண் நாய்க்குட்டி ஷேடோ ஒன்றை பாசத்துடன் வளர்த்து வந்தார். இந்த நாய் பின்னாளில் அவரது குடும்பத்தில் ஒருவராகவே மாறி விட்டது.

இந்தநிலையில்ஷேடோ நேற்று வீட்டில் இருந்து வெளியே வந்தது. அப்போது தெருவில் சுற்றி திரிந்த நாய்கள் கடித்து குதறின. இதில் ஷேடோவுக்கு படுகாயம் ஏற்பட்டது.



தொடர்ந்து அருள்வேல் குடும்பத்தினர் நாயை மீட்டு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு நாயை பரிசோதித்து பார்த்த மருத்துவர்கள் உடலில் விஷம் கலந்ததால் உடலுறுப்புகள் செயல் இழந்து விட்டதாகவும், உயிர் பிழைப்பது கடினம் என தெரிவித்தனர்.

தொடர்ந்து அருள்வேல் குடும்பத்தினர் கண்ணீருடன்ஷேடோ நாயை வீட்டுக்கு கொண்டுவந்து பராமரித்து வந்தனர். இந்த நிலையில் அந்த நாய் பரிதாபமாக உயிரிழந்தது.

வாழ்வில் பிரிக்க முடியாத பிணைப்பாக மாறிய ஷேடோ நாய்க்கு மரியாதை செலுத்தும் விதமாகவும், அதன் மேல் உள்ள பாசத்தை வெளிப்படுத்தும் விதமாகவும், வீட்டில் ஒருவர்மரணித்தால் என்ன ஈம காரியங்கள் செய்வோமோ அதேபோல இறுதி சடங்குகள் செய்வதென அருள்வேல் குடும்பத்தினர் முடிவுசெய்தனர்.

தொடர்ந்து உயிரிழந்த நாய்க்கு மாலை அணிவித்தும், வீட்டில் விளக்கு ஏற்றிவைத்தும் இறுதி சடங்குகள் நடத்தப்பட்டன.

பின்னர் இன்று காலை அந்த நாய் அலங்கரிக்கப்பட்ட காரில் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. பின்னர் அங்குள்ள சுடுகாட்டில் வளர்ப்பு நாய் ஷேடோ அடக்கம் செய்யப்பட்டது.

# சத்தியமங்கலம் பகுதியில் சாலையில் உலா வரும் யானை: வாகன ஓட்டிகள் கடும் அவதி

சத்தியமங்கலம், செப்.20

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் யானை, மான், புலி, சிறுத்தை உள்ளிட்ட வனவிலங்குகள் வசித்து வருகின்றன. இந்நிலையில் மழைக்காலங்கள் என்பதால் யானைகள் அதிகமாக இடம் பெயர்ந்து வருகின்றன. தற்பொழுது வனத்துறையில் கிடைத்த தகவலின் படி கர்நாடக வனப்பகுதியில் இருந்து யானைக் கூட்டங்கள் மிகவும் அதிக அளவில் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்கு இடம் பெயர்ந்து வருகின்றன. இதனால் ஆசனூர், தாளவாடி உள்ளிட்ட மலைப்பகுதியில் உள்ள வனச்சாலையில் யானைகள் அதிகமாக தென்படுகின்றன. குறிப்பாக பண்ணாரி அம்மன் கோவில் அருகே உள்ள வனச்சாலையில் கடந்த சில நாட்களாக யானைகள் நடமாட்டம் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால் சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள் கடும் அவதி அடைந்து வருகின்றனர். குறிப்பாக இரவு நேரங்களில் சாலை ஓரமாக யானைகள் உலா வருகிறது. இதனால் பண்ணாரி அம்மன் சாலையை கடக்கும் வாகன ஓட்டிகள் கவனத்துடனும் எச்சரிக்கை யுடனும் செல்ல வேண்டும் என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர். எக்காரணம் கொண்டும் வாகனங்களை சாலையோரம் நிறுத்த வேண்டாம் என அறிவுறுத்தி உள்ளனர்.

# சிவகங்கையில் தற்காலிக பணி நீக்கம் மற்றும் பணியிட மாறுதலை ரத்து செய்திட வலியுறுத்தி தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் ஆர்ப்பாட்டம்

சிவகங்கை, செப். 20

கடந்த 10.09.2024 அன்று மாண்புமிகு அமைச்சர்கள் சிவகங்கை மற்றும் மதுரையில், மாவட்ட ஆய்வுக்கூட்டங்களில் பொதுமக்களிடம் பெறப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற போதிய நிதி ஒதுக்கீடு இல்லை என்று பதில் அளித்த காரணத்திற்காகவும், கடுமையான பணிச்சுமைகளின் மன அழுத்தத்தின் காரணமாகவும் உரிய பதில் அளிக்காத நிலையினை கருத்தில் கொள்ளாமல் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் வி. சோமதாஸ், மாவட்ட நிர்வாகம் தற்காலிக பணிநீக்கம்செய்துள்ளதும், மதுரை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ள செல்லம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலரின் திருமதி சி. கீதாபணியிட மாறுதல் நடவடிக்கைகளும் வளர்ச்சித் துறை ஊழியர்கள் மத்தியில் கொந்தளிப்பினை ஏற்படுத்தியுள்ளதோடு, இது போன்ற நிர்வாக நடவடிக்கைகள் வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றத்திற்கும் ஊறுவிளைவிக்கும் என்பதைக் கருத்திற்கொண்டும், அவர்களின் பணிநீக்கம் மற்றும் பணியிட மாறுதலையும் உடனே ரத்து செய்ய தமிழக அரசை வலியுறுத்தி மாநிலந்தழுவிய வட்டாரத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சிவகங்கை மாவட்டம் சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் வட்டாரங்கள் பின்வருமாறு, மானாமதுரை செந்தில் குமார், திருப்பத்தூர் சேதுராமன், தேவகோட்டை கண்ணன், எஸ்.புதூர் இராஜேஸ்வரன், சிவகங்கை இரமேஷ், சாக்கோட்டை சுந்தரம், திருப்புவனம் கருப்புராஜா, சிங்கம்புனரி ஷேக் அப்துல்லா, கண்ணங்குடி முருகேசன், காளையார்கோவில் பாலசங்கர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சந்தான கோபாலன் ஆகிய தோழர்களின்தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.





மேலும் நடைபெற்ற இந்த ஆர்பாட்டத்தின் முழு விவரங்கள் பின்வருமாறு, "ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள், போதிய கால அவகாசங்கள் வழங்கப்படாமலும், உரிய பணியிடங்கள் வழங்கப்படாமலும் மேற்கொள்ள ஊழியர்கள் மீதான கடுமையான பணி நெருக்கடிக்களை தமிழக அரசும், நிர்வாகமும், கண்மூடித்தனமாக திணித்து வருகிறது. குறிப்பாக, வீடுகள் கட்டும் திட்டங்களில் பயனாளர்களின் சிரமங்களை கருத்திற் கொள்ளாமல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வீடுகள் அனைத்தையும் நூறு சதவீகிதம் துவக்கப்பட்டு, முதல் பட்டியல் குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழங்க வேண்டும் என நிர்பந்திக்கப்படுவதும், பணிகள் துவங்கப்பட்டதா? இல்லையா? என்பதை கருத்தில் கொள்ளாமலேயே, சிமெண்ட் மூட்டைகள் வழங்க வேண்டும், இரும்பு கம்பிகள் வழங்க வேண்டும் என்ற கடுமையான நிர்பந்தங்கள் மாநிலம் முழுவதும் பணியாற்றி வரும் அனைத்து நிலை அலுவலர்களையும் கடும் இன்னல்களுக்கு உள்ளாக்குகிறது. PMAY திட்டச்செயலாக்கம் சார்பாக வளர்ச்சித்துறையின் கடந்தகால காட்டுமிராண்டித்தனமான நிர்வாக நடவடிக்கைகளால் பல நூற்றுக் கணக்கான அப்பாவி வளர்ச்சித்துறை ஊழியர்கள் பலிக்கடாக்களாக ஆக்கப்பட்டு, விழிப்புத்துறை, காவல்துறை மற்றும் கடுங்குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டு மனவேதனையில் தவிப்பதும், பணி ஓய்வு நாளில் தற்காலிக பணிநீக்கம் உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் வேறு எந்த துறையிலும் இல்லாத மனித நேயமற்ற அவலமான நிலையாக உள்ளது. தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் இத்தகைய ஊழியர் விரோத நடவடிக்கைகளை பல்வேறு தருணங்களில் தமிழக அரசின் நேரடி கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதோடு, உயர் அலுவலர்களின் நேரடி கவனத்திற்கும் கொண்டு சென்று தீர்வுகளும் எட்டப்பட்டுள்ளது. தமிழக அரசு மீண்டும் KKI, RRH உள்ளிட்ட திட்டங்களையும், கள நிலைமைகளை புரிந்து கொள்ளாமலேயே பணி முன்னேற்ற அறிக்கைகளை அளிக்க, மேற்கொண்டு வரும் பல்வேறு கடுமையான நிர்பந்தங்களை கைவிட வேண்டும் என வலியுறுத்துவதோடு, சாத்தியமற்ற இலக்குகளை எய்த வேண்டி மாநில அளவில் தரவரிசை மேற்கொள்வதும், அதையொட்டிய ஆய்வுகளும் ஊழியர்களுக்கு கடுமையான மன உளச்சலைஅளிப்பதோடு, வளர்ச்சித்துறையின் மாவட்ட உயர் அலுவலர்களும், கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளாகப்படுவதும் மேன்மேலும் கொதிநிலையினையே ஏற்படுத்துகிறது. மேலும் மாநில அரசின் சிறப்புத்திட்டங்கள் என்ற பெயரில் பிறதுறை பணிகளை மேற்கொள்ளவும், நிதி ஒதுக்கீடுகளே இல்லாதநிலையில் பணிகளை மேற்கொள்ளவும் நிர்பந்திப்பது, போன்ற தமிழக அரசின் நடவடிக்கைகள் ஊழியர்கள் மத்தியில் கடும் கோபத்தினை ஏற்படுத்தி வருகிறது என்பது இந்த ஆர்ப்பாட்டத்திற்கான நோக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது". இந்நிகழ்வுகளில் கலந்து கொண்ட மாவட்ட நிர்வாக தோழர்கள் பின்வருமாறு மாவட்டத் தலைவர் வேலுச்சாமி, மாவட்ட செயலாளர் இராதா கிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் பெரியசாமி, மாவட்ட துணைத் தலைவர்கள் லூயிஸ் ஜோசப் பிரகாஷ், தனபால், கார்த்திக் மற்றும் குமரேசன், மாவட்ட இணைச் செயலாளர்கள் செந்தில் பெரியசாமி, பாண்டி மற்றும் இராம்நாத் பாபு, மாநில செயற்குழு உறுப்பினர் பயாஸ் அகமது ஆகியநிர்வாகிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 6 ஆயிரம் கனஅடியாக குறைந்தது

ஒகேனக்கல், செப். 20

கர்நாடகம் மற்றும் தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழைக்கு ஏற்ப ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது. கடந்த சில நாட்களாக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்ததால், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து நேற்று முன்தினம் காலையில் வினாடிக்கு 18 ஆயிரம் கனஅடியாக இருந்தது.

இதனால் அருவி மற்றும் காவிரி ஆற்றில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தருமபுரி மாவட்ட நிர்வாகம் தடைவிதித்து இருந்தது. இந்த நிலையில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததன் எதிரொலியாக, ஒகேனக்கல்லுக்கு நேற்று நீர்வரத்து குறைந்தது.



காலை 8 மணி நிலவரப்படி வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக நீர்வரத்து குறைந்தது. இருப்பினும் மெயின் அருவி, சினி பால்ஸ், ஐந்தருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதுடன், காவிரி ஆற்றில் பாய்ந்து ஓடுகிறது. காவிரி ஆற்றிற்கு வரும் நீர்வரத்தை தமிழக கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக உள்ளதால் அருவிகள் மற்றும் ஆற்றங்கரை ஓரங்களில் குளிக்கதருமபுரிமாவட்ட கலெக்டர் சாந்தி அனுமதி வழங்கி உள்ளார். மேலும் போலீசார், வருவாய்த்துறையினர், தீயணைப்பு படையினர் மற்றும் ஊர்க்காவல் படையினர் அங்கு தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# புதுச்சேரியில் இந்தியா கூட்டணி கட்சியினர் மறியல்: 300க்கும் மேற்பட்டோர் கைது

புதுச்சேரி, செப். 20

புதுவையில் உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை திரும்ப பெற வேண்டும், ப்ரீபெய்டு மின் மீட்டர் திட்டம் மற்றும் மின் துறை தனியார்மயத்தை கைவிட வேண்டும் என்ற கோரிக்கை களை வலியுறுத்தி இன்று இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் பந்த் போராட்டம் நடந்தது.

இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் கடலூர் சாலையில் வெங்கட சுப்பா ரெட்டியார் சிலை சதுக்கம் அருகே மறியல் போராட்டம் நடைபெற்றது. தி.மு.க. மாநில அமைப்பாளர் சிவா, காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் நூற்றுக்கணக்கான கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டனகோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தில் முன்னாள் முதல் அமைச்சர் நாராயணசாமி, முன்னாள் அமைச்சர் கந்தசாமி, முன்னாள் எம்.எல்.ஏ. பாலன், தி.மு.க. எம்.எல்.ஏ. சம்பத், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின்போது அந்த வழியே வந்த அரசு பஸ்களை வழிமறித்து கண்டன கோஷங்களை எழுப்பினர். பஸ்களை மறித்து சாலையில் படுத்து கோஷங்களை எழுப்பி தங்கள் எதிர்ப்பையும் தெரிவித்தனர்.



மறியல் போராட்டத்தின் காரணமாக அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க 100க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து கோஷம் எழுப்பி போராட்டம் நடத்திய இந்தியா கூட்டணி கட்சியினர் 500க்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்தனர். இதனால் கடலூர், விழுப்புரம் சாலையில் பரபரப்பு நிலவியது. இதேபோல வில்லியனூர், சேதராப்பட்டு, பாகூர் உட்படபல்வேறு இடங்களில் இந்தியாகூட்டணிகட்சியினர் மறியலில் ஈடுபட்டனர். மறியல் செய்தவர்களை போலீசார் கைது செய்தனர்.

# திருவண்ணாமலை கிரிவலம்: பஸ் வசதி இல்லாததால் பக்தர்கள் மறியல்



வேங்கிக்கால், செப். 20

திருவண்ணாமலையில் புரட்டாசி மாத பவுர்ணமியொட்டி நேற்று காலை முதலே பக்தர்கள் கிரிவலம் சென்றனர்.

தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானாவில்இருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தந்தனர். இரவில் லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர்.

10 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் விடிய விடிய கிரிவலம் சென்றனர். பக்தர்கள் கோவிலில் சாமி தரிசனம் செய்ய 5 மணி நேரமானது.

பின்னர் சொந்த ஊருக்கு பக்தர்கள் செல்வதற்காக ரெயில் நிலையம், பஸ் நிலையங்களில் குவிந்தனர்.

விழுப்புரம், சென்னை செல்லும் ரெயிலில் பக்தர்கள் முண்டியடித்துக் கொண்டு ஏற முயன்றனர். ரெயிலில் இடம் கிடைக்காததால் பக்தர்கள், பயணிகளிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதேபோல தற்காலிக பஸ் நிலையத்திலும் பக்தர்கள் குவிந்தனர்.

போதிய பஸ் வசதி இல்லாததாலும், பஸ்சில் இடம் கிடைக்காமல் பக்தர்கள்கடும்அவதிஅடைந்தனர்.

மதுரை, திருச்சி பகுதிகளுக்கு அதிகாலை 4 மணி முதல் பஸ்கள் இயக்கப்படவில்லை. சொந்த ஊருக்கு செல்ல முடியாமல் ஆத்திரம் அடைந்த பக்தர்கள் மாநகராட்சி அலுவலகம் முன்பு குவிந்தனர். திருக்கோவிலூர் சாலையில்திடீரெனமறியலில் ஈடுபட்டனர்.

அங்கு பணியில் இருந்த போக்குவரத்து போலீசார் மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

போதிய பஸ் வசதி இல்லாததால் மதுரை, திண்டுக்கல், திருச்சி, கும்பகோணம், சிதம்பரம், திருக்கோவிலூர் போன்ற பகுதிகளுக்கு செல்ல முடியாமல் பஸ் நிலையத்திலேயே காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.

இதனால் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மிகவும் அவதி அடைந்தனர். மேலும் 14 கிலோமீட்டர் கிரிவலம் சென்று விட்டு சாமி தரிசனம் செய்ய 5 மணி நேரம் காத்திருந்தோம். இதனால் நாங்கள் களைப்பாக உள்ளோம்.

போதிய பஸ் இல்லாமல் பஸ் நிலையத்தில் காத்திருக்கும் சூழ்நிலை உள்ளது. வரும் நாட்களில் இது போன்று பக்தர்களை காத்திருக்க வைக்காமல் பஸ் வசதி ஏற்பாடு செய்ய வேண்டும் என்றனர்.

# கவர்னர் வருகைக்கு எதிர்ப்பு: கருப்பு கொடி காட்டி காங்கிரசார் போராட்டம்



நாகப்பட்டினம், செப். 20

தமிழக கவர்னர் ஆர். என்.ரவி 2 நாள் சுற்றுப்பயணமாக நாகை மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளார்.

சென்னையில் இருந்து நேற்று தனி விமானம் மூலம் திருச்சி வந்து இறங்கியவர் சாலை மார்க்கமாக வேதாரண்யம் வருகை தந்தார்.

வேதாரண்யத்தை அடுத்த அகஸ்தியன் பள்ளியில் உள்ள உப்பு சத்தியாகிரகநினைவுஸ்தூபிக்கு வருகை தந்த கவர்னர் ஆர். என்.ரவி உப்பு சத்தியாகிரக நினைவு ஸ்தூபிக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் அருகில் உள்ள சுதந்திர போராட்ட தியாகிகளின் வரலாறு புகைப்படங்களை பார்வையிட்டார். பின்னர் வேதாரண்யத்தில் இருந்து புறப்பட்டு வேளாங்கண்ணிக்கு சென்ற கவர்னர் இரவு அங்குள்ள தனியார் விடுதியில் தங்கினார்.

நாகை மீன்வள பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கவர்னர் கலந்து கொள்கிறார். இந்நிலையில் நாகையில் பட்டமளிப்பு விழாவிற்கு வருகை தரும் தமிழக கவர்னர் ஆர். என். ரவிக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் கட்சியின் நாகை மாவட்ட செயலாளர் அமிர்த ராஜா தலைமையில் கட்சியினர் மற்றும் விடுதலை சிறுத்தை கட்சியினர் நாகை புத்தூர் மேம்பாலம் அருகே கருப்புக்கொடி காட்டி போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசாருக்கும் அவர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதையடுத்து பேராட்டத்தில் ஈடுப்பட்ட காங்கிரஸ், விடுதலை சிறுத்தை கட்சியினர் 50க்கும் மேற்பட்டோரை போலீசார் அவர்களை கைது செய்தனர். இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

# நிபா வைரஸ் எதிரொலி: கேரளாவில் இருந்து வருபவர்களுக்கு குமரி எல்லையில் காய்ச்சல் பரிசோதனை



களியக்காவிளை, செப். 20

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தை சேர்ந்த 25 வயது வாலிபர், கடந்த சில நாட்களுக்கு முன்பு காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார். அவரது உடல் மாதிரிகளை பரிசோதனை செய்ததில் அவர் நிபா வைரஸ் பாதிப்பால் இறந்திருப்பது தெரியவந்தது. இதனை தொடர்ந்து அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டதில் 175 பேர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அவர்களின் திரவ மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

மேலும் மலப்புரம் மாவட்டத்தில் உள்ள குறிப்பிட்ட பகுதிகள் கட்டுப்பாடு மண்டலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த பகுதிகளில் வசிப்பவர்கள் கேரள சுகாதாரத்துறையினரால் கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள். இதற்கிடையில் கேரள மாநிலத்தின் அண்டை மாநிலங்களும் உஷார்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி தமிழகத்தில் கன்னியாகுமரி, தென்காசி, நீலகிரி, கோவை, தேனி, திருப்பூர் ஆகிய 6 மாவட்டங்களிலும் சுகாதாரத்துறையினர் கண்காணிப்பை தொடங்கி உள்ளனர்.

களியக்காவிளை சோதனை சாவடியில் சுகாதாரத்துறையினர் காய்ச்சல் பரிசோதனை செய்தனர்

குமரி மாவட்டத்தை பொறுத்தவரை களியக்காவிளை, காக்கவிளை சோதனை சாவடிகளில் இன்று காய்ச்சல் பரிசோதனையில் சுகாதாரத்து றையினர் ஈடுபட்டனர். இதற்காக சிறப்பு கண்காணிப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் குழுவினர் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணி செய்வதற்காக 3 சுற்றுகளாக பணி பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு சுற்றுக்கு 2 பேர் பணியில் உள்ளனர். அவர்கள் கேரளாவில் இருந்து வருபவர்களை, தெர்மாமீட்டர் உதவியுடன் பரிசோதித்தனர்.

இது தொடர்பாக சுகாதாரத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், கேரளாவில் நிபா வைரஸ் தாக்கத்தை தொடர்ந்து குமரி மாவட்டத்தில் சோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. 24 மணி நேரமும் சோதனை செய்ய பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தெர்மா மீட்டர் உதவியுடன் காய்ச்சல் பரிசோதனை செய்து வருகின்றனர். இந்த சோதனையின்போது காய்ச்சல் இருப்பது தெரியவந்தால், அவர் கேரள மாநிலத்தை சேர்ந்தவர் என்றால், திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்.

அதேநேரம் அவர் தமிழகத்தை சேர்ந்தவர் என்றால், நாகர்கோவில் ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு 108 ஆம்புலன்சு மூலம் சிகிச்சைக்கு அனுப்பப்படுவார். இது தொடர்பான தகவல் சுகாதாரத்துறையின் தலைமைக்கு அளிக்கப்படும். குமரி மாவட்டத்தில் தனியார் ஆஸ்பத்திரிகளில் யாரேனும் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டால், அதுபற்றி சுகாதாரத்துறைக்குதகவல் தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

இதற்கிடையில் ஆசாரி பள்ளம் அரசு ஆஸ்பத்திரியில் நிபா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க தனி வார்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ள காய்ச்சல் வார்டில் இந்த சிகிச்சைக்காக ஆண்கள், பெண்களுக்காக தலா 2 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# சென்னையில் பிரபல ரவுடி காக்கா தோப்பு பாலாஜி என்கவுண்டரில் சுட்டுக்கொலை



சென்னை, செப். 20

வட சென்னையில் பிரபல ரவுடியாக வலம் வந்த காக்கா தோப்பு பாலாஜி போலீசார் என்கவுண்டரில் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இவர் மீது கொலை, கொள்ளை, கட்ட பஞ்சாயத்து உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக 50க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவர் அடிக்கடி சிறைக்கு சென்று வருவதை வழக்கமாக வைத்துள்ளார். இவருக்கும் ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு தொடர்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஏற்கனவே குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். கொல்லப்பட்ட ரவுடி காக்கா தோப்பு பாலாஜியின் உடல் ஸ்டாலின் மருத்துவமனைக்கு உடல் பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது.

காக்கா தோப்பு பாலாஜியை போலீசார் நீண்ட நாட்களாக தேடிவந்தனர். அவர் இடத்தை அடிக்கடி மாற்றிக்கொண்டு போலீசாருக்கு போக்கு காட்டி வந்துள்ளார். கடைசியாக வியாசர்பாடி ஜீவா ரெயில் நிலையம் அருகே உள்ள பி.எஸ். என்.எல். குடியிருப்பில்பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக போலீசார் அந்த இடத்திற்கு சென்றனர். காக்காதோப்பி பாலாஜியை நெருங்கிய போது, அவர் போலீசாரை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். இதில் தனிப்படை போலீசார் ஒருவருக்கு லேசான காயம் ஏற்பட்டது. அத்துடன் போலீஸ் வாகனம் மீது குண்டு பாய்ந்தது. இதனால் சுதாரித்துக் கொண்ட போலீசார் காக்கா தோப்பு பாலாஜி நோக்கி இரண்டு முறை சுட்டனர். இதில் குண்டு பாய்ந்து பாலாஜி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக கூறப்படுகிறது. ஆம்ஸ்ட்ராங் கொலை செய்யப்பட்ட பிறகு நடந்த 2வது என்கவுண்டர்இதுவாகும்.

# ராகுல்காந்தியை பற்றி கூறிய கருத்தில் இருந்து பின் வாங்கப்போவதில்லை: எச்.ராஜா



ராமநாதபுரம், செப். 20

ராமநாதபுரத்தில் பாஜக மாநில ஒருங்கிணைப்பு குழு தலைவர் எச்.ராஜா செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

தமிழகம் போதை மாநிலமாக உள்ளது என தொடர்ந்து கூறி வருகிறோம். அதற்கேற்ப 850 போலீசார் போதை கடத்தலுக்கு துணை போவதாக உளவுத்துறை அறிக்கையின் மூலம் வெட்ட வெளிச்சமாகி உள்ளது. எனவே, இதற்கு தார்மீக பொறுப்பேற்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதவி விலக வேண்டும்.

தனியார் உதவி பெறும் பள்ளியில் தலைமையாசிரியர் மகன் 45 குழந்தைகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இந்த சம்பவம் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் கோட்டையான திருச்சியில் நடந்துள்ளது. இதற்கு எந்த நடவடிக்கையும் இல்லை. பள்ளியில் ஆன்மிக சொற்பொழிவு நடத்தியவரை பிடிக்க 200 போலீசார் செல்கின்றனர்.

நான் 1964 முதல் ஆர். எஸ்.எஸ். இயக்கத்தில் இருந்து வருகிறேன். செல்வப்பெருந்தகை புரட்சி பாரதம், புதிய தமிழகம், வி.சி.க., பகுஜன் சமாஜ், ஐந்தாவதாக காங்கிரஸ் கட்சியில் ஐக்கியமாகியுள்ளார். நான் வாதம் செய்ய அவர் தகுதியில்லாத நபர். ராகுல் காந்தியை பற்றி கூறிய கருத்தில் இருந்து நான் பின் வாங்கப்போவதில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# 'துணை முதல்வர் பதவி' தொண்டர்களின் விருப்பமும், உதயநிதியின் விளக்கமும்



சென்னை, செப். 20

சென்னை தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயத்தில் திமுக மூத்த நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தி வந்த ஆலோசனை முடிவடைந்தது.

இந்நிலையில் திமுக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ திமுக பவள விழா கூட்டம் குறித்தே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.


★ திமுக தொண்டர்கள் தங்கள் விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.

துணை முதல்வர் பொறுப்பு குறித்து முதலமைச்சர் முடிவெடுப்பார்.

★ அனைத்து அமைச்சர்களும் முதலமைச்சருக்கு துணையாக இருப்போம்.

★ தமிழகத்தில் பெரியாரை தொடாமல் அரசியல் செய்ய முடியாது என்று பெரியார் நினைவிடத்தில் விஜய் அஞ்சலி செலுத்தியது குறித்து அவர் கருத்து தெரிவித்தார்.

# மணிமுத்தாறு அருவியில் குளிக்க தடை உத்தரவு



நெல்லை, செப். 20

நெல்லை மாவட்டம் அம்பை அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில்அமைந்துள்ள மணிமுத்தாறு அருவி மிகவும் பிரசித்தி பெற்றதாகும். ஆண்டு முழுவதும் தண்ணீர் விழும் இந்த அருவியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் உற்சாகமாக குளித்து மகிழ்வது வழக்கம்.

இந்த நிலையில் புலிகள் காப்பக துணை இயக்குனர் இளையராஜா உத்தரவின்பேரில், மணிமுத்தாறு அருவிக்கரையில் பெண்கள் உடை மாற்றும் அறை மற்றும் கழிப்பிடங்கள் ஆகியவற்றில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனவே மணிமுத்தாறு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு இன்று (வியாழக்கிழமை) தற்காலிகமாகதடைவிதிக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படுவர் என்று வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# பவுர்ணமியை முன்னிட்டு திருச்செந்தூரில் அகல் விளக்கு ஏற்றி வழிபட்ட பக்தர்கள்



திருச்செந்தூர், செப். 20

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பவுர்ணமி தோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்து வருகின்றனர்.

அதன்படி தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் நேற்று பவுர்ணமி தினத்தன்று திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் கடற்கரையில் தங்கி அகல் விளக்கு ஏற்றி வழிபாடு செய்துவிட்டு, இன்று காலையில் கோவிலுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்தனர்.

புரட்டாசி மாத பவுர்ணமி என்பதால் நேற்று கோவில் கடற்கரையில் ஏராளமான பக்தர்கள் குவிந்தனர். அவர்கள் நேற்று இரவு கடற்கரையில் தங்கி வழிபாடு செய்தனர். பின்னர் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

இதற்காக இலவச பொது தரிசனம் மற்றும் ரூ.100 சிறப்பு தரிசன பாதையில் கூடுதலாக தடுப்புகள் அமைக்கப்பட்டு பக்தர்கள் கூட்ட நெரிசல் இல்லாமல் சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோவில் வளாகத்தில் பெருந்திட்ட வளாக பணிகள் நடந்துவருவதால் வாகனம் நிறுத்துவதற்கு போதிய இடவசதி இல்லை. அதனால் நகரில் தற்காலிக வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட்டிருந்தது. இருந்தாலும் நகர் பகுதி மற்றும் நகரின் எல்லைகளில் ஆங்காங்கே ஏராளமான வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அதேபோல் நெல்லை, தூத்துக்குடி, நாகர்கோவில் வழித்தடங்களில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன.

தூத்துக்குடி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆல்பர்ட் ஜான் உத்தரவின் பேரில் திருச்செந்தூர் டி.எஸ்.பி. வசந்தராஜ் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள், சப்இன்ஸ்பெக்டர்கள் உள்பட ஏராளமானபோலீசார்பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# அவதூறு பரப்புகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்: சி.வி.சண்முகம் மனு



விழுப்புரம், செப். 20

விழுப்புரம் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் சி.வி.சண்முகம் எம்.பி. நேற்று மாலை, போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் செயல்பட்டு வரும் விழுப்புரம் சைபர்கிரைம் பிரிவு கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு தினகரனிடம் புகார் மனு கொடுத்தார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெற உள்ள மதுஒழிப்பு மாநாட்டில் அ.தி.மு.க. சார்பில் நான் கலந்து கொண்டு பேசப்போவதாக சில கருத்துக்களை பேஸ்புக், எக்ஸ், வாட்அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பதிவு செய்துள்ளனர். இது முழுக்க முழுக்க தவறான, பொய்யான தகவல் ஆகும்.

திட்டமிட்டே என்மீது களங்கம் கற்பிக்க வேண்டும் என்றே இதுபோன்ற குற்ற செயல்களை செய்துள்ளனர். இந்த பொய்யான செய்திகளை சமூக வலைதளங்களில் பதிவு செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பின்னர் வெளியே வந்த அவர் நிருபர்களிடம் கூறும்போது, தி.மு.க. அரசு பொறுப்பேற்ற இந்த 3 ஆண்டுகளில் என் மீது எத்தனையோ பொய் வழக்கு, எனக்கு கொலை மிரட்டல் விடுப்பது, அச்சுறுத்தும் செயல்கள் நடந்துள்ளது.

இதுவரை விழுப்புரம், திண்டிவனம், சென்னை உள்ளிட்ட இடங்களில் 23 புகார்களை கொடுத்துள்ளேன். ஆனால் தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே என்மீது தொடா்ந்து அவதூறு பரப்புபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# காக்காதோப்பு பாலாஜி என்கவுண்டர் ஏன்..? இணை ஆணையர் விளக்கம்




சென்னை, செப். 20

சென்னை பூக்கடை விஆர்என் கார்டன் பகுதியைச் சேர்ந்தவர் பிரபல ரவுடி காக்கா தோப்பு பாலாஜி (41). இவர் மீது 5 கொலை வழக்கு, 15 கொலை முயற்சி வழக்கு, 10க்கும் மேற்பட்ட ஆட்கடத்தல் வழக்கு, வெடிகுண்டு வழக்கு உள்பட 50க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. மேலும், ரவுடி பாலாஜி 12 முறை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைக்கு சென்றுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, பிரபல ரவுடி சிடி மணி வழக்கு ஒன்றில் கோர்ட்டில் ஆஜராகி விட்டு காரில் சென்றபோது, தேனாம்பேட்டை அருகே நாட்டு வெடிகுண்டு வீசி கொலை செய்ய முயற்சி நடைபெற்றது. இந்த வழக்கில், காக்காதோப்பு பாலாஜியை கைது செய்து சிறையில் அடைத்தனர். பின்னர், ஜாமீனில் வெளியே வந்த காக்காதோப்பு பாலாஜி தலைமறைவானார்.

இந்நிலையில் தலைமறைவாக இருந்த காக்கா தோப்பு பாலாஜி இன்று அதிகாலை என்கவுண்டரில் சுட்டுக்கொல்லப்பட்டார். கொடுங்கையூர் முல்லை நகர் மேம்பாலம் பகுதியில் போலீசார் இன்று அதிகாலை 5 மணியளவில் வாகன சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியாக வந்த காரை இடைமறித்து போலீசார் சோதனை செய்துகொண்டிருந்தனர். காரின் டிக்கியை சோதனை செய்வதற்காக டிரைவர் அருகே இருந்த நபர் இறங்கி காரின் டிக்கியை திறந்துள்ளார். காரின் டிக்கியை போலீசார் சோதனை செய்துகொண்டிருந்தபோது கார் திடீரென புறப்பட்டு சென்றது. இதனால், அதிர்ச்சியடைந்த போலீசார், உடனிருந்த நபரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது காரில் இருப்பது பிரபல ரவுடி காக்காதோப்பு பாலாஜி என தெரியவந்தது. உடனடியாக அந்த காரை போலீசார் விரட்டி சென்றனர்.

சென்னை வியாசர்பாடி ஜீவா ரயில் நிலையம் அருகே உள்ள பிஎஸ்என்எல் குடியிருப்பு பகுதிக்கு கார் சென்றுள்ளது. போலீசார் விரட்டி வருவதை அறிந்த காக்கா தோப்பு பாலாஜி காரை நிறுத்திவிட்டு புதரை நோக்கி ஓடினார். மேலும், போலீஸ் வாகனத்தை நோக்கி கள்ளத்துப்பாக்கியை கொண்டு சுட்டுள்ளார். இதனால், போலீஸ் வாகனத்தின் கண்ணாடியில் இரண்டு தோட்டாக்கள் பாய்ந்துள்ளது. இதையடுத்து, தற்காப்புக்காக காவல் ஆய்வாளர் சரவணன் சுட்டுள்ளார். இந்த துப்பாக்கி சூட்டில் காக்கா தோப்பு பாலாஜியின் மார்பில் குண்டு பாய்ந்தது. இதில் படுகாயமடைந்த காக்காதோப்பு பாலாஜியை போலீசார் ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், செல்லும் வழியிலேயே காக்கா தோப்பு பாலாஜி உயிரிழந்தார். அவரது உடல் தற்போது ராயப்பேட்டை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ரவுடி காக்கா தோப்பு பாலாஜி என்கவுண்டர் செய்யப்பட்ட பகுதியில் சென்னை வடக்கு மண்டல இணை ஆணையர் பிரவேஷ் குமார் ஆய்வு செய்தார். ரவுடி காக்கா தோப்பு பாலாஜி என்கவுண்டர் குறித்து காவல்துறை அதிகாரிகளிடம் இணை ஆணையர் கேட்டறிந்தார்.

பின்னர் இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், "வாகன தணிக்கையின் போது ரவுடி காக்கா தோப்பு பாலாஜி வந்த வாகனத்தில் கஞ்சா இருந்தது. கஞ்சாவுடன் தப்பி சென்றவரைதான் போலீசார் விரட்டிச் சென்று சுற்றி வளைத்தனர். பாலாஜி சுட முயன்றதால்தான் போலீசார் பதில் தாக்குதல் நடத்தும் சூழல் உருவானது. பாலாஜியின் இடது மார்பில் காயம் ஏற்பட்டது. போலீசார் சோதிக்கும் போது அவனுக்கு உயிர் இருந்தது. மறை தாக்குதலுக்கு பிறகே, அந்த நபர் காக்கா தோப்பு பாலாஜி என்பது தெரியவந்தது. காக்கா தோப்பு பாலாஜி மீது 58 வழக்குகள் நிலுவையில் உள்ளன. ரவுடி பாலாஜியுடன் உடன் காரில் வந்த மற்றொரு நபரை பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். அவர் வந்த காரில் இருந்து 10 கிலோ கஞ்சா, அரிவாள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன" என்று இணை ஆணையர் பிரவேஷ் குமார் கூறினார்.



உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் சிறுமத்தூர் ஊராட்சிக்குட்பட்ட முருக்கன்குடி கிராமத்தில் உள்ள ஊராட்சிமன்ற அலுவலகத்தில் மாவட்ட கலெக்டர் கிரேஸ் பச்சாவ் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

# எல்லை தாண்டி சென்றதாக கைதான தூத்துக்குடி மீனவர்கள் 10 பேருக்கு ரூ.3.5 கோடி அபராதம் 6 மாதம் சிறை

தூத்துக்குடி, செப். 20

தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளம் கிராமத்தை சேர்ந்தவர் அந்தோணி மகாராஜா. இவர் அந்தோணிதேன்டெனிலா என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் கடந்த மாதம் 20ம் தேதி மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். அவர்கள் சர்வதேச எல்லைதாண்டி இலங்கை பகுதியில் மீன் பிடித்ததாகக் கூறி 22 மீனவர்களை இலங்கையை சேர்ந்த கடற்படையினர் கைது செய்ததுடன், விசைப்படகையும் பறிமுதல் செய்தனர்.

இந்நிலையில் கடந்த வாரம் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட தூத்துக்குடி மீனவர்கள் 12 பேருக்கு தலா ரூ.1.5 கோடி அபராதம் விதித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மீனவர்கள் அபராதத்தை செலுத்த தவறினால் 6 மாதம் சிறைதண்டனை விதிக்கப்படும் என்றும் இலங்கை நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்தது. மேலும் மீதமுள்ள 10 மீனவர்களை, நீதிமன்ற காவலில் வைக்கவும் இலங்கை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இந்நிலையில் இன்று வழக்கு விசாரணை இலங்கை புத்தளம் நீதிமன்றத்தில் நடைபெற்றது. 10 மீனவர்களில் 3 பேருக்கு உடல்நலக்குறைவு காரணமாக ஆஜராகவில்லை. மீதமுள்ள 7 பேர் ஆஜராகினர். வழக்கை விசாரித்த நீதிபதி தருவைகுளம் மீனவர்கள் 10 பேருக்கும் ரூ.3.5 கோடி அபராதம் மற்றும் 6 மாதம் சிறை தண்டனை விதித்தார். இந்த தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து 7 மீனவர்களும் சிறைசாலை முன்பு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# முட்டை மசாலா கேட்டு மனைவி, மகனை தாக்கிய தொழிலாளி

கிருஷ்ணகிரி, செப். 20

கிருஷ்ணகிரி மாவட்டம் வெங்கிலிகானப்பள்ளியை சேர்ந்தவர் ரஜினி, தொழிலாளி. இவருடைய மனைவி சுவர்ணா. கடந்த 16ந் தேதி மாலை அவர் தனது வீட்டில் மதிய உணவு சாப்பிட்டு கொண்டிருந்தார். அப்போது அவர் தனது மனைவியிடம் முட்டை மசாலா கேட்டார்.

இது தொடர்பாக கணவன்மனைவி இடையே தகராறு ஏற்பட்டது. அப்போது மனைவியை ரஜினி தாக்கியதாக கூறப்படுகிறது. அந்த நேரத்தில் மகன் சூர்யா குறுக்கிட்டு சண்டையை நிறுத்துமாறு கூறினார். இதில் ஆத்திரம் அடைந்த ரஜினி, சூர்யாவையும் தாக்கி, சூர்யாவின் கழுத்தை பிடித்து நெரித்தார்.

இதில் அவரது தொண்டையில் காயம் ஏற்பட்டு மூச்சு திணறி மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சூர்யா சிகிச்சை பெற்று வருகிறார். இது தொடர்பாக மனைவி சுவர்ணா கொடுத்த புகாரின் பேரில் ரஜினி மீது கொலை முயற்சி வழக்குப்பதிவு செய்த போலீசார், அவரை கைது செய்தனர். முட்டை மசாலா கேட்டு மனைவி, மகனை தொழிலாளி தாக்கிய சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஆன்லைன் கேம்களை நள்ளிரவில் விளையாட தடை ஆணையம் பரிந்துரை

சென்னை, செப். 20

தமிழகத்தில் ஆன்லைன் விளையாட்டுகளை கட்டுப்படுத்த தமிழ்நாடு ஆன்லைன் விளையாட்டு ஆணையம் புதிய பரிந்துரைகளை செய்துள்ளது.

ஆன்லைன் விளையாட்டுகளால் பணத்தை இழந்தவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்ததை தொடர்ந்து தமிழக அரசு இந்த ஆணையத்தை அமைத்து செயல்படுத்தி வருகிறது. ஆன்லைன் விளையாட்டுகளை எப்படி கட்டுப்படுத்தலாம்? சிறுவர்சிறுமிகளை அதில் இருந்து எப்படி மீட்டெடுக்கலாம்? என்பது போன்ற ஆலோசனைகள் தமிழக அரசிடம் அளிக்கப்பட்டு உள்ளன. அதன் விவரம் வருமாறு:

நள்ளிரவு 12 மணி முதல் அதிகாரி 5 மணி வரை ஆன்லைன் விளையாட்டுக்கு தடை விதிக்கலாம். ஒரு நாளைக்கு 4 மணி நேரத்துக்கு மேல் விளையாட அனுமதிக்கக் கூடாது. ஒவ்வொரு மாதமும் ரூ.5 ஆயிரத்தில் இருந்து ரூ.20 ஆயிரம் வரை மட்டுமே செலுத்தி விளையாடும் வகையில் திருத்தங்களை செய்யலாம்.


சுமார் $1\frac{1}{2}$ லட்சம் குழந்தைகளிடம் நடத்தப்பட்ட ஆய்வில் குழந்தைகள் பலர் தங்களது பெற்றோர்களின் செல்போன்களையே ஆன்லைன்விளையாட்டுக்காக பயன்படுத்தி இருப்பது தெரிய வந்துள்ளது. இப்படி குறிப்பிட்ட நேரம் தான் விளையாட முடியும் என்பதை கொண்டு வந்து விட்டால் நிச்சயமாக ஆன்லைன் விளையாட்டுகளில் குழந்தைகள் அதிகமாக நேரத்தை செலவழிப்பது குறையும்.

சீனா, தென்கொரியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளில் இருப்பதுபோன்றுவிளையாடும் நேரம் மற்றும் பணப்பரிமாற்ற தகவல்களை செல்போன்களுக்கு அனுப்பும் வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய விதிகள் அமலுக்கு வந்தாலும் பணம் கட்டாமல் பொழுதுபோக்காக விளையாடப்படும் விளையாட்டுகளுக்கு இது பொருந்தாது என்று ஆன்லைன் விளையாட்டு தடுப்பு வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

# இணையத்தில் கசிந்த கூலி பட காட்சிகள்: இயக்குநர் லோகேஷ் கனகராஜ் வெளியிட்ட வேதனைப்பதிவு



சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் நடிகர் ரஜினிகாந்தின் 171வது திரைப்படமாக 'கூலி' பான் இந்திய படமாக உருவாகி வருகிறது. இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் திரைப்படத்தின் படப்பிடிப்பு ஐதராபாத்தில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என பல மொழிகளில் நடித்து வரும் முன்னணி நடிகர்கள் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். அந்த வகையில் சவுபின் ஷாயிர், நாகர்ஜுனா, சுருதிஹாசன், சத்யராஜ், உபேந்திரா ஆகியோர் இதில் நடிக்கின்றனர். 'தேவா' என்ற பெயர் கொண்ட கதாபாத்திரத்தில் ரஜினிகாந்த் நடிக்கிறார்.


கூலி படத்தினைப் பொறுத்தவரையில், படத்தின் படப்பிடிப்பு விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகின்றது. அண்மையில் அங்கு கனமழை பெய்தபோதுகூட படத்தின் படப்பிடிப்பு ஒத்திவைக்கப்பட்டது. அதேபோல் கூலி படத்தின் படப்பிடிப்பின்போது சிறிய விபத்து ஏற்பட்டதாகவும், நல்வாய்ப்பாக யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை என்றும் தகவல்கள் வெளியானது.

இந்த நிலையில் கூலி திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள தெலுங்கு சூப்பர் ஸ்டார் நாகர்ஜுனா தொடர்பான படப்பிடிப்புக்காட்சிகளைஇணையத்தில்மர்மநபர்கள்வெளியிட்டனர்.படப்பிடிப்புகாட்சிகள்இணையத்தில் வெளியானதால் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் உள்ளிட்ட ஒட்டுமொத்த படக்குழுவினரும் கடும் அதிருப்தியில் உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் பல பேரின் இரண்டு மாத கடின உழைப்பு ஒன்றுமே இல்லாமல் போய்விட்டது என்று இயக்குநர் லோகேஷ் கனகராஜ் வேதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "ஒரேயொரு விடியோ பதிவு மூலம் ஏராளமான திரைக் கலைஞர்கள்மற்றும்பணியாளர்களின்கடந்த இரண்டு மாதகாலகடினஉழைப்பு வீணாகிவிட்டது. இதேபோல படக்காட்சிகள் வெளியிடப்பட்டால், ஒட்டுமொத்த படத்தின் சுவாரசியத்தையும் கெடுத்து விடும். ஆகவே, இதுபோன்ற செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாமென ஒவ்வொருவரையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி" என்று அதில் லோகேஷ் கனகராஜ் பதிவிட்டுள்ளார்.


# பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு மாரி செல்வராஜ் நிதியுதவி




தூத்துக்குடி மாவட்டம் குறிப்பன்குளத்தில் கடந்த ஆகஸ்ட் 31ந்தேதி ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடி விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், இன்று இயக்குனர் மாரி செல்வராஜ் வெடி விபத்தில் உயிரிழந்த, ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள அரசர்குளத்தைச் சேர்ந்த முத்துக்கண்ணன் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதற்காக நேரில் வருகை தந்தார்.

முத்துக்கண்ணன் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். அதைத் தொடர்ந்து விபத்தில் பலியான மற்ற மூவரின் வீடுகளுக்கும் சென்று 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி ஆறுதல் கூறினார்.

# 'தமிழக இளைஞர்கள் கம்யூனிச கொள்கைகளை படிக்க வேண்டும்' இயக்குனர் மோகன் ஜி



தமிழக இளைஞர்கள் கம்யூனிசம் நோக்கி செல்வதில்லை என இயக்குனர் மோகன் ஜி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் கூறியதாவது;

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இங்கு கம்யூனிஸ்ட் கட்சிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. இளைஞர்கள்கம்யூனிசம் நோக்கி செல்வதில்லை. கம்யூனிசகொள்கையை தமிழக இளைஞர்கள் தேடிப் படிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். ஜீவானந்தம் போன்ற கம்யூனிச கொள்கை கொண்ட தலைவர்கள் பற்றி இளைஞர்கள் படிக்க வேண்டும்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பும்ரா இந்திய அணியில் இருப்பது மிகப்பெரிய கவுரவம்: பயிற்சியாளர் கம்பீர்




ஷாண்டோ தலைமையிலான வங்காளதேச கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இதில் முதலில் டெஸ்ட் தொடர் நடைபெறுகிறது. முதல் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி ரோகித் சர்மா தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்று தொடங்குகிறது. இந்திய நேரப்படி ஆட்டம் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்குகிறது.

வங்காளதேசத்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியையொட்டி இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது ,

நாங்கள் எல்லா அணிகளையும் மதிக்கிறோம். எந்த அணியையும் எளிதாக எடுத்துக் கொள்ளமாட்டோம். நாங்கள் களம் இறங்கி, எங்களுக்கே உரிய கிரிக்கெட்டை விளையாடப்போகிறோம். ஒரு சாம்பியன் அணி போன்று விளையாட விரும்புகிறோம்.

எந்தவிதமான சுழற்பந்து வீச்சையும் சமாளிக்கும் திறன் எங்களது பேட்டிங் குழுவுக்கு உண்டு. கிரிக்கெட் என்று வந்து விட்டால் நாம் எப்போதும் பேட்டர்கள் குறித்தே பேசுகிறோம். ஒரு கட்டத்தில் இந்தியா முழுக்க முழுக்க பேட்டிங் தேசமாக இருந்தது. ஆனால் இப்போது அந்த நிலைமை மாறி விட்டது. அதற்குரிய எல்லா சிறப்பும் ஜஸ்பிரித் பும்ரா, முகமது ஷமி, முகமது சிராஜ், அஸ்வின், ஜடேஜா போன்ற பவுலர்களையே சாரும். மூன்று வடிவிலான கிரிக்கெட்டிலும் உலகின் தலைச்சிறந்த பவுலராக பும்ரா வலம் வருகிறார். தனது செயல்பாட்டில் மட்டுமின்றி, சாதிக்கும் வேட்கையும் நன்றாக உள்ளது. முடிந்த அளவுக்கு அதிக டெஸ்டுகளில் விளையாட அவர் விரும்புகிறார். பும்ரா போன்ற பவுலர் அணியில் இருப்பது உண்மையிலேயே கவுரவமாகும். போட்டியில் எந்த ஒரு நிலையிலும் ஆட்டத்தின் போக்கை அவரால் மாற்ற முடியும். இந்த தொடரிலும் அதே போன்ற தாக்கத்தை ஏற்படுத்துவார் என்று நம்புகிறேன்' என்றார்.

# தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான மகளிர் டி20 கிரிக்கெட்; 13 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றி



தென் ஆப்பிரிக்கா மகளிர் கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்று 10 என தொடரில் முன்னிலையில் இருந்தது. இந்நிலையில் இருஅணிகளுக்கும் இடையிலான 2வது டி20 போட்டி முல்தானில் இன்று நடைபெற்றது.

இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற தென் ஆப்பிரிக்கா முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதனையடுத்து பாகிஸ்தானின் தொடக்க ஆட்டக்காரர்களாக முனீபா அலி மற்றும் குல் பெரோசா ஆகியோர் களம் இறங்கினர். இதில் குல் பெரோசா (10 ரன்கள்) முதலில் அவுட் ஆனார். இதன்பின் சித்ரா அமீன் களம் இறங்கினார். முனீபா அலி சித்ரா அமீன் இணை நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தது. இதில் முனீபா அலி 45 ரன்னிலும், சித்ரா அமீன் 28 ரன்னிலும், அடுத்து வந்த நிதா தார் 29 ரன்னிலும் அவுட் ஆனார்கள்.

தொடர்ந்து பாதிமா சனா மற்றும் அலியா ரியாஸ் ஜோடி சேர்ந்தனர். இருவரும் அதிரடியாக ஆடி ரன்கள் சேர்த்தனர். இறுதியில் பாகிஸ்தான் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 181 ரன்கள் எடுத்தது.

தென் ஆப்பிரிக்கா தரப்பில் சேகுகுனே 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதனால், 182 ரன் எடுத்தால் வெற்றி பெறுவதோடு தொடரையும் கைப்பற்றலாம் என்ற நிலையில் தென் ஆப்பிரிக்கா அணி ஆடியது.

அந்த அணியின் லாரா உல்வார்தத் மற்றும் தஜ்மின் பிரிட்ஸ் முதலில் களமிறங்கினர். எனினும், பிரிட்ஸ் 9 ரன்களில் வெளியேறினார். லாரா (36), அன்னெக் போஸ் (24), நதின் டி கிளெர்க் (12) ரன்களில் ஆட்டமிழந்தனர்.

இதன்பின் சுனே லூவஸ் மற்றும் குளோ டிரையான் இணை சேர்ந்து அதிரடியாக விளையாடினர். சுனே (53) மற்றும் குளோ (30) ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். எனினும், 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு அந்த அணி 168 ரன்களே எடுத்திருந்தது. இதனால், 13 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ளது. தொடர் 11 என்ற புள்ளி கணக்கில் சமனில் உள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.